இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“இயேசு இந்தப் பன்னிருவரையும் அனுப்பியபோது அவர்களுக்கு அறிவுரையாகக் கூறியது: “பிற இனத்தாரின் எப்பகுதிக்கும் செல்ல வேண்டாம். சமாரியாவின் நகர் எதிலும் நுழைய வேண்டாம். மாறாக, வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள். அப்படிச் செல்லும்போது ‘விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது’ எனப் பறைசாற்றுங்கள். நலம் குன்றியவர்களைக் குணமாக்குங்கள்; இறந்தோரை உயிர்பெற்றெழச் செய்யுங்கள்; தொழுநோயாளரை நலமாக்குங்கள்; பேய்களை ஓட்டுங்கள்; கொடையாகப் பெற்றீர்கள்; கொடையாகவே வழங்குங்கள்.” (மத் 10:5-10)

# சமூகத்தில் பலவீனமானவர்களுக்கு மீட்பாகவும், குரலற்றவர்களுக்குக் குரலாகவும் செயல்படுவோம் !

## திருத்தந்தை வேண்டுகோள்

**வத்திக்கான்:** குரலற்றவர்களுக்காகக் குரல் கொடுக்கத் தெரிந்த சமூகமே நம் அனைவருக்கும் தேவை என்றும், சமூக வளர்ச்சிக்கு ஆதரவான சிந்தனை மற்றும் செயல்பாட்டிற்கு பங்களித்து, அமைதியின் பாதையில் ஒன்றாக நடக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

‘**எதிர்காலத்தை உருவாக்கும் நினைவுகள், சமூகத்தின் அடிப்படையில் சிந்தித்து செயல்படுதல்**‘ என்ற தலைப்பில் ஜூன் 5 திங்களன்று நூறாவது ஆண்டு’ என்று பொருள்படும் Centesimus Annus பாப்பிறை அறக்கட்டளையின் 30 ஆவது ஆண்டை முன்னிட்டு அதன் உறுப்பினர்களை சந்தித்த போது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

1993ஆம் ஆண்டு திருஅவையின் சமுதாய எண்ணங்களை வளர்க்கும் நோக்கத்துடன் திருத்தந்தை புனித 2ம் ஜோன்பால் அவர்களால் உருவாக்கப்பட்ட பாப்பிறை அறக்கட்டளையின் உறுப்பினர்கள் தங்களது அர்ப்பணிப்பால் சமூகக் கோட்பாடுகள் எழுத்தளவில் மட்டுமன்று, மனிதனின் சமூக வாழ்க்கை முறையாக மாறலாம் என்பதை வெளிப்படுத்துகின்றார்கள் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ் தனிநபரின் நடுநிலைத்தன்மை, பொது நன்மை, ஒற்றுமை, உறுதுணை ஆகியவை உறுதியான செயல்களாக மாற்றப்பட்டு எல்லாம் தொடர்புபடுத்தப்பட்டு இணைக் கப்பட்டுள்ளன என்றும் எடுத்துரைத்தார். சுற்றுச்சூழல் பிரச்சினையைச் சமூகப்


அறக்கட்டளை உறுப்பினர்களுடன் திருத்தந்தை

பலரின் இதயங்களையும் செயல்களையும் மாற்றியதற்காக அவ்வறக்கட்டளையின் உறுப்பினர்களுக்கு தன் நன்றியினைத் தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒருங்கிணைந்த சூழலியலில் பிரச்சினையிலிருந்து பிரிக்க முடியாது. அவை ஒன்றாக இணைந்து செல்கின்றன என்று வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சுற்றுச்சூழலைக் கவனித்து, ஏழைகள் மேல் கவனம் செலுத்த ஒன்றிணைந்து நிற்கவும் பாப்பிறை அறக்கட்டளை உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்.

யாரும் தனியாக மீட்கப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனிமனிதத்துவத்தில் விழுந்து வாழ்வையும் மகிழ்வையும் இழந்துவிடாது உடன்பிறந்த உறவு, சமூக நட்புறவு கொண்டு கவனமாகச் செயல்படவும் கேட்டுக்கொண்டார்.

ஒருவர் இரண்டு தலைவர்களுக்கு பணியாற்ற முடியாது என்ற நற்செய்தி வரிகளை நினைவுகூர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செல்வத்திற்கா? கடவுளுக்கா? என்று தான் இயேசு கேட்கிறார். மாறாக, அலகைக்கா? கடவுளுக்கா? என்று கேட்கவில்லை ஆகவே பணம் அலகையை விட கொடியது என்றும் சுட்டிக்காட்டினார்.

*மெரினா ராஜ் – வத்திக்கான்*

**2023 ஆகஸ்ட் மாதம் 31-செப்டம்பர் 4 வரை மங்கோலியாவில் திருத்தந்தை**

## வங்கி நிர்வாகி திருத்தொண்டர் ஆனார்

**கோலசிலாங்கூர்:** பெஸ்தாரி ஜெயாவைச் சேர்ந்த அருட்சகோதரர் ஞானசெல்வம் பிரான்சிஸ் அவர்கள், கடந்த ஜூன் திங்கள் 5-ஆம் நாள் திருத்தொண்டராக அருள்பொழிவுப் பெற்றார். கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் தலைமையில் புக்கிட் நானாஸ் காண்வென்ட் சிற்றாலயத்தில் மேற்கண்ட அருள்பொழிவு கொண்டாட்டம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு சுங்கை டாரா எனும் இடத்தில் பிறந்த இவர், தொடக்கநிலை கல்வியைத் தமிழ்ப்பள்ளியில் பயின்று, பின்னர் இடைநிலைப் பள்ளி கல்வியை முடித்துக்கொண்டு, கோலாலம்பூரில் ஒரு வங்கியில் நிர்வாகியாகப் பணிபுரிந்த காலத்தில், இறையழைத்தலை ஏற்று, குருத்துவக் கல்லூரியில் இணைந்தார்.

திரு பிரான்சிஸ்-ரோணி என்பவர்கள் இவரது பெற்றோர் ஆவர். அன்று, அருள்பணியாளர்களோடு புனித வனத்து சின்னப்பர் பங்குத் தந்தை ஜேம்ஸ் கேபிரியேல் அவர்களோடு, சில அருட்சகோதரிகளும். நெருங்கிய குடும்ப உறுப்பினர்களும் சூழ ‘இதோ நானிருக்




கிறேன்’ (எசா 6:8) என்ற முழக்கத்தோடு, திருத்தொண்டராக அருள்பொழிவுப் பெற்றார்.

அருள்தந்தை என்வின் பீட்டர் அவர்கள் முன்பு இப்பங்கின் பங்குத்தந்தையாக இருந்த காலத்தில் திருத்தொண்டர் ஞானசெல்வம் மற்றும் அருட்சகோதரி கிளோரியா திரேசா ஆகிய இருவரும் இறையழைத்தலை ஏற்றனர் என்பது இப்பங்கின் வரலாற்றில் இடம்பெறுகிறது.

நிறைவாக, திருத்தொண்டர் எல்லாம் வல்ல இறைவனுக்கும், பேராயர்/ஆயர்களுக்கும், குருத்துவக் கல்லூரிகளின் முதல்வர் களுக்கும், பேராசிரியர்களுக்கும், பங்குத் தந்தை ஜேம்ஸ் கேபிரியல் அவர்களுக்கும், பயிற்சிகள், ஒத்துழைப்புகள் வழங்கிய அனைத்து அருள்பணியாளர்களுக்கும், பங்கு மக்களுக்கும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் புனித வனத்து சின்னப்பர் பங்கு மக்கள் சார்பாகவும் குடும்ப சார்பாகவும் நன்றி கூறினார்.

*-லில்லி பீட்டர், பெஸ்தாரி ஜயா*


பேர்ராயர் மற்றும் அருள்பணியாளர்கள் மத்தியில் திருத்தொண்டர் ஞான செல்வம்

## லிஸ்பனில் 2023 உலக இளையோர் தினம்




‘மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார்’ என்ற லூக்கா நற்செய்தியின் வரிகளை மையமாகக் கொண்டு இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் முதல் வாரங்களில் உலக கத்தோலிக்க இளையோர் நாளானது போர்ச்சுக்கலிலுள்ள லிஸ்பன் நகரின் நடைபெற உள்ளது. ‘இளையோரே நீங்கள் உங்கள் உள்ளே இருந்து வெளியே வளர வேண்டும். நாட்டின் இளைஞர்கள் சரியான பாதையில் செல்ல வழிகாட்டவும் ஊக்குவிக்கவும், தேசத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கவும் சிரமங்களை எதிர்கொள்ள அவர்களை ஊக்குவிக்கவும் இந்நாள் கொண்டாடப்படுகின்றது.

# ஈப்போ, லூர்து அன்னை பங்கில் மறைக்கல்வி ஞாயிறு,பெற்றோர் தினக் கொண்டாட்டம்

**ஈப்போ:** இங்கு சிலிபின் சாலையில் உள்ள புனித லூர்து அன்னை பங்கில் '**இறைநம்பிக்கையுள்ள குடும்பங்களுடன் திருஅவையைப் புதுப்பிப்போம்**' எனும் கருப்பொருளில், மறைக்கல்வி ஞாயிறோடு கூடிய பெற்றோர் தின விழா கொண்டாடப்பட்டது. கடந்த ஞாயிறு, ஜூன் 4-ஆம் திகதி காலையில் திருப்பலியுடனும் மாலையில் மேடை நிகழ்ச்சிகளுடனும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.





அன்று காலை திருப்பலியை மறைக்கல்வி மாணவர்கள்வும் இருந்தது என்றால் மிகையாகாது. பங்கு மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் புரிந்துணர்வு, நல்லிணக்கம், மனிதநேயம், ஒத்துழைப்பு, பகிர்வு போன்ற நன்னெறி பண்புகள் மேலும் வளர்ச்சியுற இக்கொண்டாட்டம் பரிதும் உதவியதோடு உறவு பாலமாகவும் இருந்தது.

நிறைவாக, பங்குத்தந்தை ரோபர்ட் டேனியல் அவர்களின் ஆதரவிலும் ஆலோசனையிலும் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கொண்டாட்டம் அவரது ஆசியோடும் நன்றியுரையோடும் நிறைவுபெற்றது.

*-குளோரியா மத்தியூஸ், ஈப்போ*

# பாலியல் தொல்லைக்கு எதிராக நியாயம் கேட்டுப் போராடுவோருக்கு ஆதரவாக இந்திய கத்தோலிக்க அருட்சகோதரிகள்

**வத்திக்கான்:** இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவரின் பாலியல் தொல்லைக்கு எதிராக நியாயம் கேட்டுப் போராடிவரும் மல்யுத்த வீராங்கனைகளுக்கு ஆதரவாகக் கத்தோலிக்க பெண் துறவிகள் போராட்டம் ஒன்றை நடத்தினர்.





கடந்த ஜூன் 05, திங்களன்று கர்நாடகாவின் பெங்களூருவில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் ஏறக்குறைய 300 பெண் துறவிகள் கலந்து கொண்டனர்.

இந்த 300 பெண் துறவறத்தாருடன் ஏறக்குறைய 200 அருள்பணியாளர்கள், அருள்சகோதரர்கள் மற்றும் பொதுநிலையினரும் தங்கள் ஒருமைப்பாட்டை வெளியிட்டுக் கலந்துகொண்டனர்.

அரசியலில் சக்தி வாய்ந்த ஆளும் கட்சியைச் சேர்ந்த மல்யுத்த கூட்டமைப்பின் தலைவருக்கு எதிராக நியாயம் கேட்டுப் போராடிவரும் மல்யுத்த வீராங்கனைகளுக்கு ஆதராவாக இந்திய பெண் கத்தோலிக்க பெண் துறவறத்தார் தங்கள் ஒருமைப்பாட்டை வெளியிடுவதாக இந்திய கத்தோலிக்க துறவறத்தார் அமைப்பின் தலைவர், அருள்சகோதரி Nirmalini Nazareth தெரிவித்தார்.

அநீதிக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து குரல் எழுப்பவேண்டிய நேரம் வந்துள்ளது என்று அழைப்பு விடுக்கிறது அவரின் அறிக்கை.

மல்யுத்த வீராங்கனைகளுக்கு ஆதரவை வெளியிட்டு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக உரைத்த அருள்சகோதரி நிர்மாலினி அவர்கள், அவர்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் குறித்த மௌனத்தைக் கலைப்பதுடன், இதில் ஈடுபட்ட கட்சி பிரதிநிதி மீது நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என அரசுக்கு அழைப்பு விடுத்தார்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்*

# இந்திய இரயில் விபத்து குறித்த திருத்தந்தையின் கவலை



**வத்திக்கான்:** ஜூன் மாதம் 2ஆம் தேதி, வெள்ளிக்கிழமை மாலை இந்தியாவில் ஏறக்குறைய 300 பேரின் உயிர்களைப் பலிவாங்கிய இரயில் விபத்து குறித்து தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மூவொரு கடவுள் திருவிழாவான ஜூன் 4, ஞாயிற்றுக்கிழமையன்று உரோம் நகர் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் குழுமியிருந்த திருப்பயணிகளுக்கு நண்பகல் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த இரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக செபிப்பதாகவும், காயமடைந்த அனைவரின் அருகாமையில் தான் இருப்பதாகவும் தெரிவித்தார். கோரமண்டல் விரைவு வண்டி, ஹவுரா அதிவிரைவு வண்டி, சரக்கு இரயில் என மூன்று இரயில்கள் ஒடிசா மாநிலம் பாலசோர் என்ற இடத்தில் ஒன்றோடொன்று மோதிய விபத்தில் ஏறக்குறைய 300 பேர் உயிரிழந்தது குறித்து தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்*

# வத்திக்கான் வங்கியின் 2022ஆம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கை

**வத்திக்கான்:** கடந்த 6-ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று வெளியிடப் பட்ட 2022ஆம் ஆண்டிற்கான வத்திக்கான் வங்கி என அறியப்படும் IORஇன் வருடாந்திர அறிக்கையானது அனைத்துலக தணிக்கை நிதி அமைப்புக்களோடு இணைந்து 11ஆவது ஆண்டாக தன்னுடைய ஆண்டறிக்கையை வெளியிட்டுள்ளது.

வத்திக்கான் வங்கியின் நிதியானது Mazars Italia என்னும் நிதி தணிக்கையாளர் அமைப்பால் ஏப்ரல் 25 அன்று ஏற்கப்பட்டு, வத்திக்கான் வங்கியின் 2022 ஆம் ஆண்டிற்கான இலாபம் 2,96,00,000 யூரோக்கள்(Euro) என்றும், வட்டி 3.7 விழுக்காடு, என்றும் அவ்வறிக்கைத் தெரிவித்துள்ளது.

வத்திக்கான் வங்கியானது திருத்தந்தை மற்றும் சமயப் பணிகளுக்கான தனது முதன்மையான பணியினைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது என்றும், அவ்வறிக்கைத் தெளிவுபடுத்துகின்றது.

# ஆண்டவர் பரிவிரக்கத்தின் ஊற்று

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 11-ஆம் ஞாயிறு. இன்றைய முதல் வாசகமானது விடுதலைப் பயண நூலில் கடவுள் தாமே, எகிப்திலிருந்து மீட்டுக்கொணர்ந்து, சீனாய் பாலைநிலத்தை வந்தடைந்த இஸ்ராயேல் மக்களிடம் "நீங்கள் என் உடைமைகள் தான்; ஆனால் நீங்கள் எனக்கு செவிசாய்த்தால் எல்லா மக்களினங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள். மேலும் எனக்கு நீங்கள் குருத்துவ அரசாகவும், தூய மக்களினங்களாகவும் இருப்பீர்கள்"என்று வாக்குறுதி அளிக்கிறார். ஆம், எல்லா கடவுளும் ஒன்று தான் என்ற எண்ணத்தில் உழல்வோருக்கு 'எனக்கு செவிசாய்த்தால் அனைத்து மக்களினத்திலும் தனித்துவமாக, நீங்கள் என் தனிச்சொத்தாக இருப்பீர்கள்' என்றும் 'அரச குருத்துவ தூய மக்களினமாகவும் இருப்பீர்கள்' என்றும் அறிவுறுத்துகிறார் கடவுள்.

கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட நாம் உண்மையில் அதற்குத் தகுதியில்லாதவர்கள். பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்துவின் உயிரை நமக்காகக் கையளிக்கத் தந்தை திருவுளம் கொண்டார். அதை நிறைவேற்றியும் விட்டார். நாம் மீட்புப் பெற இந்த உலகில் தந்தை அனுப்பிய இயேசுவைத் தவிர வேறு எவரின் பெயரும் அருளப்படவில்லை. இந்த ஒப்பற்ற மகிழ்ச்சியைத் தருபவர் தந்தை கடவுள் ஒருவரே.

இன்றைய நற்செய்தியில் இயேசு அங்குத் திரண்டிருந்த மக்கள் மேல் பரிவு கொண்டு அவர்களுக்குத் தேவையான அருளுரையும், குணமளித்தலையும் தருகிறார். இங்கு அவரின் பணி வாழ்வில் தாம் அடுத்துச் செய்யவேண்டியிருந்த மாபெரும் தூதுரைப் பணிக்கு வாரிசாக பன்னிருவரையும் தேர்ந்தெடுக்கிறார். மக்களிடையேச் சென்று "விண்ணரசு நெருங்கிவிட்டது, எனப் பறைசாற்றவும், அதற்கானப் பணிக்கு, தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கவும், இயேசு பன்னிருவரைப் பெயர் சொல்லி அழைக்கிறார். பன்னிருவருக்கும் தீய ஆவிகளை ஓட்டவும், நோய் நொடிகளைக் குணப்படுத்தவும் அதிகாரம் அளிக்கிறார். மேலும் கொடையாகப் பெற்றுக்கொண்ட அனைத்தையும் கொடையாக தருமாறு பணிக்கிறார்

இயேசு தம் சீடர்களுக்குத் தந்த இந்த அதிகாரம் இன்றைய நம் திருஅவையில் அருள்பொழிவு பெற்ற அனைவருக்கும் அருளப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் முப்பணிகளான குருத்துப்பணி, அருள் வாக்குப் பணி மற்றும் அரசப் பணி ஆகியவற்றால் இறைமக்களை வழிநடத்தவும், காக்கவும், நற்செய்தியைப் பறைசாற்றவும் அருள்பொழிவுப் பெற்ற அனைத்துப் பணியாளர்களும், பொதுக் குருத்துவம் பெற்ற பொதுநிலையினரும் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

நாம் உலகினின்று தனித்துப் பிரித்து எடுக்கப்பட்டவர்கள்; உலகில் வாழ்ந்தாலும், நம்முடைய பார்வை விண்ணகவாழ்வு என்பதை இன்றைய நாளில் நாம் சிந்திப்போம். அதையே செயலாக்குவோம்.
உறுதிப்புசுதல் பெற்றவர் தூய ஆவியின் தூய ஆவியாரின் கனிகளில் ஒன்றான பரிவன்பைப் பெற்றுள்ளோம். இயேசுவைப் பின்பற்றுகின்ற ஒவ்வொருவருக்கும் மற்றவர்மீது பரிவுகாட்டுவதுதான் அழகு சேர்க்கும்.

இதனை நாம் நம்முடைய மனத்தில் இருத்தி மக்களிடம் பரிவு காட்டுவோம். அதன் மூலமாக அவரது மக்களாவோம்; இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

*- ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**ஆண்டின் பொதுக்காலம் 11-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | விப 19: 2-6a |
| பதிலுரை | 100: 1-2. 3. 5 |
| 2 வாசகம் | உரோ 5: 6-11 7 |
| நற்செய்தி | மத்தேயு : 9: 36- 10: 8 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**